**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 8014/E/2018**

திரு D.செல்வேந்திரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 19.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 24.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 25.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு D.செல்வேந்திரன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி அ.ஷோபா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொ), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 19.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் செய்யூர் வட்டம், அணைக்கட்டு கிராமம் புல

எண்.44/2இ, 44/9, 44/12 ஆகியவற்றின் உரிமையாளர் பெயர், பட்டா எண்கள்.620, 832, 898, 906, 907, 510-ன்படி தற்கால உரிமையாளர் விபரம், மேற்படி பட்டா எண்களுக்கான முன்னாள் உரிமையாளர்களின் பெயர் விபரம், என்று பேர் மாறுதல் வழங்கப்பட்டுள்ளன, எதனடிப்படையில் பெயர் மாறுதலானது, உரிமையாளர்கள் வழங்கிய ஆவணங்களின் நகல், அணைக்கட்டு கிராமத்தின் "அ" பதிவேடு மற்றும் FMB வரைபடம். மேற்படி கிராமத்தைச் சார்ந்த திருமதி சிவப்பூசனம் அவர்கள் மனு நீதி நாள் முகாம் 25.04.2018 அன்று வழங்கிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரம், மனுவின் நகல், திரு இராமசாமி அவர்கள் 30.05.2017 அன்று வழங்கிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் என 7 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அதிகாரி, மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்புமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 24.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையிட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைக் கொடுக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 25.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகவலை அனுப்பி வைக்குமாறு செய்யூர் வட்டாட்சியர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், மேற்படி விபரம் மேல்முறையீட்டாளருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது மேல்முறையீட்டாளரின் மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு, 16.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு தயாராக உள்ளதாகத் தெரிவித்து, விசாரணையின்போது மேல்முறையிட்டாளருக்கு நேரில் சார்வு செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலைப் பெற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர், தான் கோரிய இனம் 3, 4, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றிற்கு உரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், மேற்படி தகவலை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு

உத்திரவிடுமாறும் கோரினார். மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஆணையம் ஏற்று, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 19.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனம் 3, 4, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றிற்குரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 8014/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு D.செல்வேந்திரன்,
நெ.4/61, செங்கேளி அம்மன் கோயில் தெரு,
சிட்டிலம்பாக்கம் கிராமம்,
விட்டிலாபுரம் (அஞ்சல்),
திருக்கழுக்குன்றம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 102.

Copy to: Judgement File.
24/09/19